ISSN: 2455 - 0531
UAN: TN0300061112

இனம் INAM

Since 2015 முதல்

பல்துறைப் பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

Multi Diciplinary International E- Journal of Tamil Studies

பிப்புருவரி, மே, ஆகட்டு. நவம்பர் மாதங்களில் வெளிவரும் | Published in February, May, August and November

மலர்: 10 | இதழ்: 40 | நவம்பர் | 2024 | Vol.: 10 | Issue: 40 | November | 2024

இனம் | INAM (IIETS)

E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112

மலர் : 10 | இதழ் : 40 | நவம்பர் | 2024 | Vol.: 10 | Issue: 40 | November | 2024

DOI: 10.5281/zenodo.13294268

பல்துறை - பன்னாட்டு இணைய தமிழாய்விதழ் | இருமொழி | காலாண்டிதழ்

Multi - Disciplinary International E-Journal for Tamil Studies | Bi-Lingual | Quarterly

கலை | இலக்கியம் | மொழியியல் | மானுடவியல் | நாட்டுப்புறவியல் | ஊடகவியல்
பண்பாட்டியல் | தொல்லியல் | கணினித் தமிழ் | இயற்கை மொழியாய்வு

Arts | Literature | Linguistica | Philosophy | Folklore | Media Culture | Archeology
Tamil Computing | Science Tamil NLP

பதிப்பாசிரியர் | **Chief Editors**

முனைவர் மு. முனீஸ்மூர்த்தி | Dr. M. Munees Moorthy
தமிழ் உதவிப் பேராசிரியர், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 17
Assistant Professor in Tamil, Bishop Heber College, Trichy - 17

முனைவர் சத்தியராஜ் தங்கச்சாமி | Dr. Sathiyaraj Thangasamy
தமிழ் உதவிப் பேராசிரியர், ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42
Assistant Professor in Tamil, Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42

வெளியீடு: இனம் பதிப்பகம், கோயமுத்தூர், தமிழ்நாடு, இந்தியா
Publication: Inam Pathippagam, Coimbatore, Tamil Nadu, India
+91 9677821364, +91 9600370671, inameditor@gmail.com, www.inamtamil.com

அட்டைப்பட வடிவமைப்பு | **Wrapper Designing**
இரா. அரிகரசுதன், அனலி | R. Ariharasuthan, Anali

பன்னாட்டுத் தரநிலை ஆய்விதழ்கள் பின்பற்றும் மதிப்பீட்டு முறைமைகள்

ஆசிரியர் குழு

முனைவர் ஆ. மணி, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, புதுச்சேரி.
முனைவர் க.பாலாஜி, பூசாகோ கலை அறிவியல் கல்லூரி (த.), கோயம்புத்தூர்.
முனைவர் இரா. குணசீலன், பூசாகோ கலை அறிவியல் கல்லூரி (த.), கோயம்புத்தூர்.
முனைவர் ந. இராஜேந்திரன், பூசாகோ கலை அறிவியல் கல்லூரி (த.), கோயம்புத்தூர்.
முனைவர் ப. சிவமாருதி, சிங்மாய் பல்கலைக்கழகம், தாய்லாந்து.
முனைவர் இரா. இராஜா, தேசியக் கல்லூரி (த.), திருச்சி.
முனைவர் ச. முத்துச்செல்வம், தியாகராசர் கல்லூரி (த.), மதுரை.
முனைவர் எஃப். எச். அகம்மது சிப்லி, இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
முனைவர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ், சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.
முனைவர் தெ. வெற்றிச்செல்வன், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
முனைவர் பாரதிராஜா சக்கரவர்த்தி, அயர்லாந்து கால்வே தேசியப் பல்கலைக்கழகம், அயர்லாந்து.
முனைவர் டி. தேன்மொழி, எஸ். எஸ். என். பொறியியல் கல்லூரி, சென்னை.
திரு பு. கமலக்கண்ணன், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி.
திரு யாழ்பாவாணன், யாழ்ப்பாணம், வடமாகாணம், இலங்கை.
திரு இரா. அரிகரசுதன், டி. ஜே. வடிவமைப்புக் கல்லூரி, கோயமுத்தூர்.
முனைவர் சுபலலிதா சி. என்.. எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், சென்னை.

Editorial Team

Dr. A. Mani, Bharathidasan Government College for Women, Pondicherry.
Dr. G. Balaji, PSG College of Arts and Science (Autonomous), Coimbatore.
Dr. R. Gunaseelan, PSG College of Arts and Science (Autonomous), Coimbatore.
Dr. N. Rajendran, PSG College of Arts and Science (Autonomous), Coimbatore.
Dr. B. Sivamaruthi, Chiang Mai University, Thailand.
Dr. R. Raja, National College (Autonomous), Trichy.
Dr. S. Muthuselvam, Thiagarajar College (Autonomous), Madurai.
Thiru F. H. Ahamed Shibly, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Dr. Kingston Paul Thampuraj, Sultan Idris Education University, Malaysia.
Dr. D. Vetrichelvan, Department of Tamil Studies in Foreign Countries, Tamil University, Thanjavur.
Dr. Bharathi Raja Sakkaravarthi, National University of Ireland Galway, Ireland.
Dr. D. Thenmozhi, SSN College of Engineering, Chennai.
Thiru. P. Kamalakkannan, Jawaharlal Nehru University, New Delhi.
Thiru Yarl Pavanan, Yarlpanam, Vadamaahaanam, SriLanka.
Thiru R. Ariharasuthan, D J Academy of Design, Coimbatore.
Dr. Subalalitha C N., SRM Institute of Science and Technology, Chennai.

ஆலோசனைக் குழு
முனைவர் சு. இராசாராம், நாகர்கோயில்.
முனைவர் சிலம்பு நா. செல்வராசு, புதுச்சேரி.
முனைவர் ந. வேலுச்சாமி, சேலம்.
திரு சு. ஸ்ரீகந்தராசா, ஆஸ்திரேலியா.

Advisory Team
Dr. S. Rajaram, Nagercoil.
Dr. Silambu N. Selvarasu, Pondicherry.
Dr. N. Veluchamy, Salem.
Thiru S. SriKantharasa, Australia.

மதிப்பீட்டறிஞர் குழு
முனைவர் அ. மணி, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, பாண்டிச்சேரி.
முனைவர் க. பாலாஜி, பூசாகோ கலை அறிவியல் கல்லூரி (த.), கோயம்புத்தூர்.
முனைவர் இரா. குணசீலன், பூசாகோ கலை அறிவியல் கல்லூரி (த.), கோயம்புத்தூர்.
முனைவர் ந. இராஜேந்திரன், பூசாகோ கலை அறிவியல் கல்லூரி (த.), கோயம்புத்தூர்.
முனைவர் ப. சிவமாருதி, சிங்மாய் பல்கலைக்கழகம், தாய்லாந்து.
முனைவர் இரா. இராஜா , தேசியக் கல்லூரி (த.), திருச்சி.
திரு இரா. அரிகரசுதன், டி. ஜே. வடிவமைப்புக் கல்லூரி, கோயமுத்தூர்.
முனைவர் சுபலலிதா சி. என்.. எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், சென்னை

Reviewer Team
Dr. A. Mani, Bharathidasan Government College for Women, Pondicherry.
Dr. G. Balaji, PSG College of Arts and Science (Autonomous), Coimbatore.
Dr. R. Gunaseelan, PSG College of Arts and Science (Autonomous), Coimbatore.
Dr. N. Rajendran, PSG College of Arts and Science (Autonomous), Coimbatore.
Dr. B. Sivamaruthi, Chiang Mai University, Thailand.
Dr. R. Raja, National College (Autonomous), Trichy.
Thiru R. Ariharasuthan, D J Academy of Design, Coimbatore.
Dr. Subalalitha C N., SRM Institute of Science and Technology, Chennai.

பன்னாட்டுத் தரநிலை ஆய்விதழ்கள் பின்பற்றும் மதிப்பீட்டு முறைமைகள்

10.5281/zenodo.14173301

இனம் பல்துறைப் பன்னாட்டுத் தமிழாய்விதழ், தொடர்ந்து பன்னாட்டுத் தரத்திலான ஆய்வுமுறைமைகளில் கவனம் செலுத்தி வருவதை அறிவீர்கள். அதன் தொடர்ச்சியாக இந்தப் பதிப்பில் ஆய்வுக்கட்டுரைகளை மதிப்பிடும் முறைமைகள் குறித்து அறியப்படுத்த விரும்புகின்றோம். இனம் ஆய்விதழின் மதிப்பீட்டறிஞர்கள், மதிப்பிட விரும்பும் அறிஞர்கள் பின்வரும் அளவுகோல்களைக் கொண்டு மதிப்பிடுவார்கள் என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். அவை,

---

*தலைப்பு (Title), ஆய்வுச்சுருக்கம் (Abstract) and அறிமுகம் (Introduction) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

---

*ஆய்வுமுறை (Methodology) / கருவிகள், முறைமைகள் (Materials and Methods) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

---

*ஆய்வுநோக்கம் (Objective) / கருதுகோள் (Hypothesis) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)

- பொருந்தாத ஆய்வு (Not applicable)

---

* வரைபடங்கள், அட்டவணைகள் (Figures and Tables) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

---

*ஆய்வு முடிவுகள் (Results) / தரவுப் பகுப்பாய்வு (Data Analysis) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

---

*கருத்துரை (Interpretation) / விளக்கம் (Discussion) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

*முடிபு (Conclusions) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

*துணைநூற்பட்டியல் (References) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

*நெறிமுறை (Compliance) with ஆய்வறம் (Ethical) Standards – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

*மொழிநடை (Writing style) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

*தகவல்கள் (Supplemental Information) and தரவு (Data) – மதிப்பீடு (overall evaluation)

- மிகச் சிறப்பு (Outstanding)
- சிறப்பு (Sound)
- சிறிய அல்லது குறைவான திருத்தங்களுடன் மறு ஒப்படைப்புச் செய்யலாம் (Sound with minor or moderate revisions)
- சிறப்பில்லை அல்லது அடிப்படைப் பிழை உள்ளது (Unsound or fundamentally flawed)
- பொருந்தாத ஆய்வு (Not applicable)

என்பனவாகும். இந்த அடிப்படையில்தான் மதிப்பீட்டறிஞர்கள் தங்களின் மதிப்புரைகளை வழங்குவர். அதன் மாதிரி மதிப்பீட்டுக் கருத்துரைகள் பின்வருமாறு அமையும்.

*தலைப்பு (Title), ஆய்வுச்சுருக்கம் (Abstract) and அறிமுகம் (Introduction) – மதிப்பீடு (overall evaluation)

- Clear and informative; aligns well with the study's content.
- Could be more concise/more engaging to highlight core findings.
- தெளிவும் தகவலும்; ஆய்வின் உள்ளடக்கத்துடன் நன்கு ஒத்துப்போகிறது.
- மையக் கண்டுபிடிப்புகளை முன்னிலைப்படுத்தும் வகையில் சுருக்கமாகவோ / ஈர்க்கக்கூடியதாகவோ இருக்கலாம்.

---

*ஆய்வுமுறை (Methodology) / கருவிகள், முறைமைகள் (Materials and Methods) – மதிப்பீடு (overall evaluation)

- Methodology is robust and replicable.
- Needs more clarity/detail on certain procedures for full reproducibility.
- முறையியல் வலுவானதும் மீளுருவாக்கக்கூடியதுமாகவும் அமைந்துள்ளது.
- முழுமையான மீளுருவாக்கத்திற்குச் சில நடைமுறைகளில் அதிக தெளிவு/விவரம் தேவை.

---

*ஆய்வுநோக்கம் (Objective) / கருதுகோள் (Hypothesis) – மதிப்பீடு (overall evaluation)

- Objectives and hypotheses are clearly defined and relevant.
- Some refinement needed for clarity and focus.
- நோக்கங்களும் கருதுகோள்களும் தெளிவாக வரையறுக்கப்பட்ட அளவில் பொருத்தமானவையா என அறிந்து கருத்துரைக்கப்படும்.
- தெளிவு, கவனம் செலுத்துவதற்குச் சில சீரமைப்புத் தேவைகளைக் கண்டறிந்து எடுத்துரைக்கப்படும்.

---

* வரைபடங்கள், அட்டவணைகள் (Figures and Tables) – மதிப்பீடு (overall evaluation)

- Well-organized and visually effective; supports data.
- Improvements needed in labeling/clarity for better comprehension.
- நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதனை உறுதி செய்தல். அது காட்சிப்படுத்தல் மூலமாக இந்த ஆய்வு பயனுள்ளதா, படமும் அட்டவணையும் தரவினை ஆதரிக்கின்றதா எனவும் கண்டறிந்து கூறப்படும்.
- சிறந்த புரிதலுக்கான துல்லியம்/தெளிவு மேம்படுத்தப்பட வேண்டும் எனல்.

*ஆய்வு முடிவுகள் (Results) / தரவுப் பகுப்பாய்வு (Data Analysis) – மதிப்பீடு (overall evaluation)

- Results are comprehensive and statistically sound.
- Analysis could benefit from further explanation/additional statistical tests.
- முடிவுகள் விரிவானவையா, புள்ளியியல் அடிப்படையில் சரியானவையா எனவும் கண்டறிந்து விளக்கப்படும்.
- மேலும் விளக்கம்/கூடுதல் புள்ளியியல் சோதனைகள் மூலம் பகுப்பாய்வுப் பயனடையலாம்.

*கருத்துரை (Interpretation) / விளக்கம் (Discussion) – மதிப்பீடு (overall evaluation)

- Insightful and aligns with objectives; highlights key findings.
- Requires a deeper analysis to fully explore implications.
- ஆய்வுரை நுண்ணறிவுமிக்க கருத்துக்கள் நோக்கங்களுடன் ஒத்துப்போகின்றதா; முதன்மையான கண்டுபிடிப்புகளை முன்னிலைப்படுத்துகின்றதா எனவும் கண்டறிவதாக அமையும்.

- விளைவுகளை முழுமையாக ஆராய்வதற்கு ஆழமான பகுப்பாய்வு தேவை. அவற்றை ஆய்வுக்கட்டுரை பின்பற்றியுள்ளதா எனவும் நோக்கப்படும்.

*முடிபு (Conclusions) – மதிப்பீடு (overall evaluation)

- Conclusions are well-supported by the data.
- Needs refinement to clearly connect to study objectives.
- முடிவுகள் தரவுகளால் நன்கு ஆதரிக்கப்படுகின்றனவா எனப் பார்க்கப்படும்.
- ஆய்வுநோக்கங்களுடன் தெளிவாக இணைந்த சீரமைப்பு உள்ளதா இல்லையா என்பதும் நோக்கப்படும்.

*துணைநூற்ட்டியல் (References) – மதிப்பீடு (overall evaluation)

- Thorough and relevant; supports the study context.
- Some references are outdated/missing; verify for accuracy and completeness.
- விரிவான, பொருத்தமான ஆய்வுச்சூழலுடன் பொருந்தும் துணைநின்ற குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளனவா எனப் பார்க்கப்படும்.
- சில குறிப்புகள் காலாவதியானவையா / விடுபட்டுள்ளனவா, துல்லியமான குறிப்புகளா என முழுமையாகச் சரிபார்க்கப்படும்.

*நெறிமுறை (Compliance) with ஆய்வறம் (Ethical) Standards – மதிப்பீடு (overall evaluation)

- Fully compliant; ethical considerations well addressed.
- Requires additional details on consent or data protection protocols.
- செல்நெறியில் முழுமையாக இணங்குகிறதா; நெறிமுறைக் கருத்துக்கள் நன்கு கையாளப்படுகின்றனவா எனப் பார்க்கப்படும்.

- கூடுதல் தெளிவு அல்லது தரவுப் பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்த கூடுதல் விவரங்கள் தேவையா எனப் பார்க்கப்படும்.

---

*மொழிநடை (Writing) – மதிப்பீடு (overall evaluation)

- Clear and professional language; well-structured.
- Minor language/editing improvements needed for clarity.
- தெளிவான நடைதானா, தொழில்முறை மொழிநடைதான எனப் பார்க்கப்படும்.
- தெளிவுக்காகச் சிறிய மொழி/பதிப்புத் திருத்தங்கள் தேவையா எனப் பார்க்கப்படும்.

---

*கூடுதல் தகவல்கள் (Supplemental Information) and தரவு (Data) – மதிப்பீடு (overall evaluation)

- Useful additional data provided, enhances study.
- Could be organized for easier reference; some data may overlap.
- பயனுள்ள கூடுதல் தரவு வழங்கப்பட்டுள்ளதா, ஆய்வை வளமாக மேம்படுத்துகிறதா எனப் பார்க்கப்படும்.
- எளிதான குறிப்புக்காக ஒழுங்கமைக்கப்படலாமா, சில தரவுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதா எனப் பார்க்கப்படும்.

இதனை மையமிட்ட குறிப்புகளை வைத்துத்தான் இனிவரும் காலங்களில் ஆய்வுக்கட்டுரை ஏற்கப்பெற்றதாகக் கொண்டு வெளியிடப்படும் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம். இதன் ஆய்வு முன்னோட்டம் அடுத்த இரண்டு ஆண்டுகள் நெகிழ்வுத் தன்மையுடன் பின்பற்றப்படும். அதன்பின்பு முறையான அல்லது புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தும் ஆய்வுகளை மட்டுமே இனம் ஆய்விதழ் வெளியிடும்.

மகிழ்வுடன்,
மு. முனீஸ்மூர்த்தி
சத்தியராஜ் தங்கச்சாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்கள்

உள்ளே...

பன்னாட்டுத் தரநிலை ஆய்விதழ்கள் பின்பற்றும் மதிப்பீட்டு முறைமைகள்................0

பண்டைத் தமிழகப் போர் நடைமுறைகளும் தொடர் விளைவுகளும் **The Proceedings of War and Post-war Effects in Early Tamilnadu**

கண்மணி கணேசன் ச. | Kanmani Ganesan S 7

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 10 | இதழ் : 40 | நவம்பர் | 2024 | Vol.: 10 | Issue: 40 | November | 2024

பண்டைத் தமிழகப் போர் நடைமுறைகளும் தொடர் விளைவுகளும் The Proceedings of War and Post-war Effects in Early Tamilnadu

கண்மணி கணேசன் ச. | Kanmani Ganesan S.[1] ORCID

[1] Former etired Principal & HOD in Tamil, Srikaliswari college, Sivakasi in Tamilnad. India. E mail: kanmanitamilskc@gmail.com. DOI:**10.5281/zenodo.14192879**

ஆய்வுச்சுருக்கம் (Abstract)

பண்டைத் தமிழக அரசரது போர்முறைகளையும் பின்விளைவுகளையும் தொகுத்துப் பகுப்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். வெற்றிக்கு வழிவகுத்த நடைமுறைகளையும் கொண்டாட்ட நடவடிக்கைகளையும் பின்விளைவுகளையும் தொகுத்த பின்னரே; போரைத் தொடர்ந்து இன்னார் இன்ன பயன் பெற்றார் என்றும்; இன்னின்னார் முடி சூடி ஆண்டனர் என்றும் முடிவு செய்ய இயல்கிறது. இப்பகுப்பாய்வுக்குத் தொகைநூல்கள் முதனிலைத் தரவுகள் ஆக; ஆய்வாளர், உரையாசிரியர், பதிப்பாளர், தொல்லியலார் கூறும் கருத்துகள் இரண்டாம்நிலைத் தரவுகளாம். வேந்தரும் குறுநிலமன்னரும் முடிசூடி இருந்தனர். வேந்தர் வெற்றியால் பார்ப்பாரும் இரவலராகிய திணைமாந்தரும் பயன் உற்றனர். குறுநில மன்னரின் வெற்றி அவரது வயல்களைக் காத்தது.

This article aims to analyze and summarize the proceedings of the wars and the after-effects among the kings of early Tamilnadu. It's needed to list the specific factors leading to victory, the mode of celebrating the same and the after- effects to decipher the beneficiaries of the victory and identify those Kings who wore crowns. The anthologies and ten idylls serve as primary sources for the analytical approach. The archaeologists' reports, findings of the researchers, views of the commentators and notes of the publishers serve as secondary sources. Both *vendhar* and *kurunila mannar* were wearing crowns. The *paarppaar* and *iravalar* among *Thinaimaanthar* were benefited by *venthar's* victory. Victory of *kurunila mannar* saved their farms.

திறவுச்சொற்கள் (Keywords): கோட்டையும் எயிலும், வேந்தர், நிலைப்படை, குறுநில மன்னர், கொடி, கொடை, எரிஊட்டல், மகட்கொடை நேர்தல்.

முன்னுரை

பண்டைத் தமிழக அரசராகிய வேந்தர், குறுநிலமன்னர் ஆகிய இரு திறத்தார்க்கு இடையிலும்; வேந்தர் தம்முள்ளும் இடையறாது போர்கள் நிகழ்ந்தன. அப்போர்களில் வெற்றி கிட்டிய வழிவகைகள், கொண்டாட்ட முறைகள், பின்விளைவுகள் ஆகியவற்றைத் தொகுத்துப் பகுக்கும்போது பயனாளிகள் யார் என்பதையும் முடிசூடியோர் யார் என்பதையும் தெளிய முடிகிறது. பகுப்பாய்வாக அமையும் இக்கட்டுரைக்குத் தொகை நூல்கள் முதனிலைத் தரவுகள் ஆக; தொல்லியலார் அறிக்கைகள், உரையாசிரியர், ஆய்வாளர், பதிப்பாளர் ஆகியோர் கருத்துகள் முதலியன துணைத்தரவுகள் ஆகின்றன.

குறுநில மன்னரின் போர் நடைமுறைகள்

குறுநில மன்னர் தம் மாளிகையைச் சுற்றிலும் அகழி, கொத்தளம், காவற்காடு ஏதும் இன்றி மண்ணாலான மதில் சுவர் மட்டும் உடையவர். உழுவித்த அவர் நிலைப்படை இன்றிப் பணியாட்களையே போர்வீரராகவும் பயன்படுத்தினர். வேந்தரைத் தனித்து நின்று எதிர்க்காது; பிற மன்னர், நட்பினர் உடன்சேர்ந்து போரிட்டனர். பூக்கோள், குளநீராடல், வழிபாடு, வேலின் நீர்ப்படை போன்ற நியதிகளைப் பின்பற்றிப் போருக்குக் கிளம்பினர். தம் நெல்வேளாண்மையைக் காக்கத்; தம் இனத்தவர்க்கே பெண்ணைக் கொடுத்து; உறவைப் பெருக்கி; வலுப்படுத்தினர்.

மண்புனை இஞ்சி

சேரரின் எதிரிகளை ‘மண்புனை இஞ்சி மதில்’ (பதிற்.58) உடைய மன்னர் எனப் பேசுவதால் மண்ணாலான சுற்றுச்சுவர் உடைய மன்னர் மாளிகை பற்றி அறிய இயல்கிறது. ‘முரவுவாய் ஞாயில் ஓரெயில்’ என்ற பாடல் தொடரில் உள்ள எயில் எனும் சொல்லுக்கு மதில் என்றே பதவுரை கூறுகின்றனர் உரையாசிரியர் (அகநானூறு நித்திலக் கோவை பா.373- ப.161-162). 'மதில் ஓரரண்' (அகம்.45) கொண்டதாகச் சுட்டும் அவரது அரண்மனை; வாயிலில் திண்ணிய கதவை உடையது என்பதை;

> “எழுவிட் டமைத்த திண்ணிலைக் கதவின்
> அரைமண் இஞ்சி” (புறம்.341)

என்பதால் அறியலாம். கடலில் மிதக்கும் கப்பலைப் போல நெடுவேள் ஆதனது மனை கழனிகளுக்கு நடுவே தோற்றமளித்தது.

> “பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று
> உணங்குகலன் ஆழியில் தோன்றும்
> ஓரெயில்” (புறம்.338);

என்பதால் மாளிகையைச் சுற்றி அகழியும் காவற்காடும் இல்லை என்பது வெளிப்படை. போர் நடந்தபோது பருந்து உயிர்த்து மதிலில் அமர; மன்னர்க்காகப் போர்செய்வோர் பகைவரை மயக்கும் பாதைகளில் மடக்கினர்.

> “...பருந்து உயிர்த்து
> இடைமதிற் சேக்கும் புரிசைப்
> படைமயங்கு ஆரிடை நெடுநல் ஊரே” (புறம்.343)

என்ற காட்சி கொத்தளம் இல்லாத நிலையில் போர் தெருக்களில் நிகழ்ந்ததை உணர்த்துகிறது. வேளிருள் நன்னனின் பாழி மட்டும் மலைமேல் இயற்கையாக அமைந்த அகழியுடன் இருந்தது என எண்ண இடம் உளது (மலை.90-93; அகம்.15).

பணியாளரே போர்வீரர்

உழுவித்த மன்னன் தனது வில்லாற்றல் மிக்க ஏவலர்க்குத் தன் வேளாண்மைப் பயனாகிய நெற்குவியலில் இருந்து படியளந்தான் என்பதால் வேளிரின் பணியாளரே போர்த்தொழிலும் செய்தமை வெளிப்படை (புறம்.353).

பூக்கோளும் வழிபாடும்

போருக்குரிய அடையாளப் பூவைச் சேகரிப்பது போரின் முதனிலை நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது. எனவே முதலில் பூக்கோள் விழாவை அறிவித்தனர். பின் நீராடித் தெய்வத்தை வழிபட்டனர் (புறம்.341); வேலினை நீர்ப்படை செய்தனர் (புறம்.354).

கூட்டுமுயற்சி

கரிகாலனோடு வாகைப் பறந்தலைப் போரில் தோற்று ஒன்பது குடையும் நண்பகல் ஒழித்த பீடில் மன்னர் பற்றிய செய்தியில் குறுநில மன்னர் ஒன்பதின்மர் ஒருங்கு போரிட்ட செய்தி ஆவணமாகி உள்ளது (அகநானூறு மணிமிடை பவளம்- பா.125). 'விண்தோய் வியன்குடை ஈரெழு வேளிர்' காமூரில் வென்ற போதும் பதினான்கு மன்னர் கூட்டுச் சேர்ந்து போர் செய்து வெற்றி பெற்றமை தெரிகிறது (அகம்.135). வேள் நன்னன் தனக்கு உற்ற நண்பர்களோடு சேர்ந்து மோகூர்ப் பழையனை வீழ்த்தினான்.

"நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னரும் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்...
பழையன் பட்டெனா" (அகம்.44)

என்ற பாடல்மூலம் நன்னனோடு ஏற்றை, கங்கன், கட்டி, புன்றுறை, அத்தி எனக் குறுநில மன்னர்களும் பிறருமாக ஐந்து பேர் சேர்ந்து பழையனை வீழ்த்தியமை பெறுகிறோம்.

உரையாசிரியர் ஏற்றை எனும் பெயரை அத்திக்கு உரிய அடையாகக் கொள்கின்றனர் (அகநானூறு களிற்றியானை நிரை ப.121-122). 'நறும்பூண் அத்தி' என அடையுடன் கூடிய பெயர் தெளிவாக இருக்க 'ஏற்றை' இன்னொரு நண்பனைக் குறிக்கிறது எனக் கொள்வதில் சிக்கல் எழவில்லை. ஏறைக்கோன் என்ற பெயரில் ஒரு குறுநில மன்னன் இருந்தமையால் 'ஏற்றை' என்ற பெயரும் ஒரு மன்னனுக்கு உரியதாக இருக்க வாய்ப்பு உளது (புறம்.157).

உறவை வலுப்படுத்தல்

குறுநில மன்னனின் மகளைப் பற்றி அறிய முயலும் வீரனிடம் அவளது தந்தை,

"இரும்பனை அன்ன பெருங்கை யானை
கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும் பெருந்தகை
மன்னர்க்கு வரைந்திருந் தனனே" (புறம்.340)

எனப் புலவர் உரைப்பதால்; செறுவில் நின்று பாழாக்கும் வேந்தனின் யானையை வெளியேற்றி எதிர்க்கும் துணிவு, வலிமை, விவேகம் கொண்ட இன்னொரு மன்னனுக்கே தன் மகளை மணம் செய்து கொடுப்பான் எனத் தெளிவிக்கிறார் புலவர் (புறநானூறு பகுதி-II, ப.279).

வேந்தரின் போர் நடைமுறைகள்

வேந்தர் அகழி அல்லது காவற்காடு அல்லது இரண்டும் சூழ்ந்த கோட்டையில் நிரந்தரமாக ஏற்றிய சின்னம் பொறித்த கொடியுடன் ஆண்டனர். இது எதிரிகளின் போர்முயற்சிக்குச் சவாலாக இருந்தது. முரசுக்கு வழிபாடு நடத்தியபின் போர்மேற் சென்றனர். யானை, குதிரை, தேர், காலாள் நான்கும் அடங்கிய நிலைப்படை அவரிடம் இருந்தமை வெற்றிக்கு வழி கோலியது. யானைப்படை கொண்டு குறுநில மன்னர் மாளிகையின் ஓரெயிலையும் நிலைக்கதவையும் இடித்தனர்; செறுவில் யானையை நிறுத்திப் பாழாக்கினர். காவல்மரத்தைத் தடிந்தனர்; நீர்நிலைகளைத் தூர்த்தனர்; ஊர், குதிர், வயல்களை எரித்தனர்; நன்செய்யைப் புன்செய் ஆக்கினர். குறுநில மன்னரது மகளைத் தமக்கு மணமுடித்துத் தர வற்புறுத்தினர்.

சின்னம் பொறித்த கொடியாடும் கோட்டை

பாண்டியனின் மதுரைக் கோட்டை உயர்ந்த நிலைகள், வலிமையான கதவுகள், அகன்ற வாயில்கள், மாடங்கள், இயந்திரப்படைகள் உடைய கொத்தளங்கள், அகழி அனைத்தும் பொருந்தி இருந்தது (பத்துப்பாட்டு தொகுதி-II, மதுரைக்காஞ்சி- ப.29- அ.351-356).

மேற்கரை வஞ்சியில் காவற்காட்டுடன் இருந்த சேரரின் கோட்டை அம்பு எய்யும் பொறியுடன்; அகன்ற வாயில், முதலைகள் மிக்க ஆழ்ந்த அகழி, வளைந்து உயர்ந்த மதில் அனைத்தும் கொண்டு இருந்தது (பதிற்.53). இக்கோட்டை அழிமுகம் என அழைக்கப்பட்ட ஸூடோஸ்த்துமஸ்க்குச் சற்றுத் தள்ளி உள்நாட்டில் இருந்தது என மேனாட்டுக் கடலோடிகள் குறிப்பிடுவதைத் தமிழ் ஆய்வாளர் எடுத்துக் காட்டுகின்றனர் (ம.பசுவலிங்கம், சங்ககால வஞ்சி- 1984- ப.134; V.கனகசபை- ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்- 1952- ப.33-34; S.கிருஷ்ணசாமி ஐயங்கார்- சேரன் வஞ்சி- 1942- ப.14.) இன்றைய கேரளத்தில் கழிமுகத்துப் பட்டணம் அகழ்வாய்வு மேற்கரை முசிறியை அடையாளம் காட்டுவதால் அதை ஒட்டிச் சற்றே உள்நாட்டில் இருந்த கோட்டையுடன் கூடிய வஞ்சி மறுக்க இயலாத வரலாற்று உண்மை ஆகிறது (Pattanam and the Excavations- Muziris heritage- Spice route [Rediscover the Spice Route- a Kerala Tourism and UNESCO Project in Muziris]).

கருவூரில் செம்பால் செய்ததை ஒத்த கோட்டையைச் சுற்றி இருந்த அகழியில் கராஅம், இடங்கர் ஆகியன இருக்க; கோட்டைக்கு உள்ளிருந்த நீண்ட இலஞ்சியிலும் முதலை இருந்தது.

> “கராஅம் கலித்த குண்டுகண் அகழி,
> இடங்கரும் குட்டத்து உடன்தொக்கு ஓடி
> கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சி
> செம்புஉறழ் புரிசைச் செம்மல் மூதூர்" (புறம்.37)

என்ற பாடலடிகள் இக்கருத்தைத் தாங்கி உள்ளன. அமராவதிப் படுகையில் கிடைத்துள்ள சேரர் நாணயங்கள் அதன் கரையில் வஞ்சி இருந்ததை உறுதி செய்கின்றன என்ற தொல்லியலார் அறிக்கை ஊடகச் செய்தியாக வெளிவந்துள்ளது (Aravindan Neelakandan “Dr. R. Krishnamurthy (1933-2021): A Life In Quest Of Ancient Scripts And Coins” SWARAAJYA- March 5th 2021).

வேந்தனின் கொடியில் சின்னம் வரைந்து இருந்ததை; ‘விரவுஉருவின் கொடிநுடங்கும்... வேந்தே’ (புறம்.38) என விதந்து ஓதி உள்ளனர். ஒளவை சு.துரைசாமிப் பிள்ளை ‘விரவிய பல நிறத்தை உடைய கொடி’ எனப் பதவுரை கூறுகிறார் (புறநானூறு பகுதி-I ப.107). ‘உரு’ என்ற சொல் வண்ணத்தைக் குறிக்கும் எனினும்; இடம்நோக்கிப் பார்க்கும்போது; பல வண்ணங்கள் விரவிய கொடி என்பதைக் காட்டிலும்; ‘உருவம் வரைந்த கொடி’ எனப் பொருள்கொள்வதே மிகவும் பொருத்தமாக உள்ளது. சேரனிடம் கொடி அசையும் யானைப்படை இருந்தது (பதிற்.52). கபிலர் சேரனை ‘வில்லோர் மெய்ம்மறை’ எனப் புகழ்வதை; ஒளவை சு.துரைசாமிப்பிள்ளை 'வில்வீரராகிய சான்றோர்க்கு மெய்புகு கருவி அனையன்' என்ற ஒப்புமைப் பொருளாகக் கூறுகிறார் (பதிற்றுப்பத்து. ப.307- பா.65). அங்ஙனம் இன்றி ‘வில் சின்னம் பொறித்த கொடி உடைய சேரர் குலத்தின் பெருமைகள் அனைத்தும் மெய்ப்படப் பொருந்தியவன்’ என ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகப் பொருள்கொள்ள வழி உளது. சேரர் பெருமையை மேம்பட எடுத்துக் கூறுவதாகவும் இது அமைகிறது.

நிலைப்படை

> "படுமணி மருங்கின பணைத்தாள் யானையும்
> கொடிநுடங்கு மிசைய தேரும் மாவும்
> படையமை மறவரொடு... வேந்தர்" (புறம்.351)

என்ற பாடல்பகுதி வேந்தரின் படையில் யானை, குதிரை, கொடித் தேர், மறவர் என நாற்பிரிவுகள் இருந்தமை பற்றிக் கூற; அது நிலையானது என்பதை; 'மாற்றருந் தானை... வேந்தன்' (ஐங்குறுநூறு- ப.709- பா.451) என்ற தொடரால் அறிகிறோம். சேரனிடம் வாள் கேடயத்துடன் காலாட்படை, தேர்ப் படை, யானைப்படை, அனைத்தும் இருந்தன (பதிற்.52).

முரசு வழிபாடு

வேந்தர் போர்க்குப் புறப்படும் முன் பொருநர் துணையுடன் அரிய மரபு வழுவாமல் முரசுவழிபாடு நடத்தினர். விசும்பு அதிரப் பறையை முழக்கி வீரரின் சினத்தைத் தூண்ட; குருதி அளைந்த பிண்டத்தைச் சடங்கு ஆற்றும் பேய்மகள் படபடத்து நடுங்கிய கைகளால் அளித்தாள். அதை மிகுந்த கள்ளுடன் படைக்க; எறும்பும் மூசாத அப்பலியைக் காக்கையும் பருந்தும் உண்பது கண்டு; 'வீரமரணம் அடைந்தோரின் ஆவி காக்கை உருவில் வந்து பலியை ஏற்றுக் கொண்டது' என்ற நம்பிக்கையுடன் வெற்றி உறுதி என்றனர். பேய்மகள் சமயச் சடங்கு ஆற்றுபவள் என்பதை ஆய்வாளர் கூறியுள்ளனர் (கைலாசபதி க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்- ப.55). மேலும்;

"முரண்மிகு கடுங்குரல் விசும்பு அடைபு அதிரக்
கடுஞ்சினம் கடாஅய் முழங்கு மந்திரத்து
அருந்திறல் மரபின் கடவுள் பேணியர்" (பதிற்.30)

எனப் பொருநர் வழிபாடு நிகழ்த்த; அது மானதம், மந்தம், உரை என அமையும் மூவகை மந்திரங்களுள் உரையாக அமைந்தது எனப் பழைய உரைகாரர் கூறுவதை ஔவை சு.துரைசாமிப் பிள்ளை எடுத்துக்காட்டுகிறார் (பதிற்.ப.129-130). ஆனால் விசும்பு அதிரும்படிப் பறை முழக்கிச் செய்யும் வழிபாட்டில்; 'வாயுரையாக மந்திரம் முழங்கினார்' என்பது சூழலுக்குப் பொருத்தமாக இல்லை. தம் பறையால் வீரமரணம் அடைந்தோர் ஆவியைக் காக்கை உருவில் வரவழைத்தற்குப் பொருநரது பறைமுழக்கே அங்கு மந்திரம் ஆனது என்பதே பொருந்தும்.

யானைப்படையின் திறன்

குறுநில மன்னன் எயிலை யானையால் தாக்கி வேந்தன் உடைக்க; அவன் கலங்குகிறான் (நற்றிணை 43- ப.56).

இமயவரம்பன் பகைவேளிரது மதிலின் வாயிலில் இருந்த மரத்தால் ஆன நிலையையும் கதவையும் அழித்த பாங்கை;

"மழைதவழ்பு தலைஇய மதில்மரம் முருக்கி" (பதிற்.15- ப.30).

என விரிக்கிறார் குமட்டூர்க் கண்ணனார். உரையாசிரியர் 'மதில் மரம்' என்ற சொற்றொடருக்குக் காவற்காடு எனப் பொருள் தருவது பொருந்தவில்லை. ஏனெனில் இமயவரம்பன் மன்னரோடு போர் உடற்றுகிறான் என்பது அதே பாடலில் 'மன்மருங்கு அறுப்ப' எனச் சொல்லப்படுகிறது. உழுவித்த குறுநில மன்னர் வயல்களைப் பெருக்கினரே அன்றிக்; காவல் காடுகளைப் போற்றவில்லை. உ.வே.சாமிநாதையர் வேளிரை உழுவித்தவர் என விதந்து கூறுகிறார் (புறநானூறு- 1935- ப.49&68). எனவே 'மதில்மரம்' வேளிரின் ஓரெயிலாகிய இஞ்சியில் இருந்த கதவு பொருத்தப்பட்ட நிலை என்பதே பொருந்தி வருகிறது.

"யானை / கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்" (புறம்.340)

என்பதால், விதைப்பிற்கு உரிய நீர் நிறைந்த செறு யானையால் பாழ்பட்டமை புலப்படுகிறது. சேரனின் தூசிப்படை முன்னேற; யானையை மன்னனது காவல் மரத்தில் கட்ட; நீர்த்துறை பாழ் ஆனமையை;

10.5281/zenodo.14173352

"கடிமரத்தாற் களிறு அணைத்து
நெடுநீர துறை கலங்க" (பதிற்.33)

எனப் பாடி இருப்பது காண்க.

நன்செய்யை எரியூட்டிப் புன்செய் ஆக்கல்

கரிகாலன் வேளிர் வயலை எரித்துப் பாழ் ஆக்கினான் (பட்டி.283-284, 240-270). நெடுஞ் செழியனும் அதே செயலால் பெருமை பெறுகிறான். எரி பரப்பிய நன்செய் காடானது; நெல்லைச் சேமித்து வைத்த குதிர் கூகையின் வசிப்பிடம் ஆனது (மது.55-61, 126, 154-156, 169-176). சேரனும்;

"முனை எரி பரப்பி... கொடிவிடு குரூஉப் புகை
பிசிரக் கால்பொர அழல்கவர் மருங்கின்" (பதிற்.15)

பகைவர் நிலத்தைப் பாழ்படுத்தினான். மன்னனை வென்று;

"நாடு அடிப்படுத்தலிற் கொள்ளை மாற்றி
அழல்வினை அமைந்த" (பதிற்.81)

காரணத்தைக் காரியத் தொடர்போடு பேசும் பாடலும் உளது. கொள்ளையடித்து விட்டு விட்டால் தோற்றவன் மீண்டும் தலை நிமிர ஏதுவாகி விடும். தீக்கிரை ஆக்குவதே அடிமைப் படுத்த ஏற்ற வழி என எண்ணிச் செயல்பட்டதைப் புலவர் விளக்குகிறார் (பதிற்.ப.388). போரில் சிந்திய குருதியின் ஈரம் காயுமுன் வேந்தனைச் சார்ந்த திணைமாந்தர் மன்னனின் நிலத்தில் கழுதை ஏர் பூட்டி உழுது வரகும் கொள்ளும் விதைத்தனர் (புறம்.392).

மகட்கொடை நேர்தல்

வேந்தர் குறுநில மன்னரின் மகளை வற்புறுத்திப் பெண் கேட்டனர். யானையோடு சூழ்ந்த வேந்தர்க்கு; மகளைத் தர மறுத்த மன்னனைக் கபிலர் காட்டுகிறார் (புறம்.337). தண்பணை மன்னன் வேந்தனுக்கு மகளைத் தர மறுத்ததை அரிசில்கிழார் பாடுகிறார் (புறம்.342). பரணர் பெண்ணுக்காகப் போர்க்குத் தயாரான வேந்தனால் மன்னனின் வயல் சூழ்ந்த ஊர் கவின் அழியப் போகிறது எனப் பதறுகிறார் (புறம்.343). உழுவித்த வேளிரின் நன்செயாகிய நாடு மட்டுமின்றி; அந்நாட்டைச் சார்ந்த உழவர் வாழும் ஊரும் பாழாகப் போகிறது என்ற பொருள் கிடைக்கிறது.

வெற்றி, தோல்விக்குரிய அடையாளங்கள்

முரசும் காவல்மரமும் இழந்த அரசன் தோற்றவன் ஆனான். ஒரு வேந்தனை இன்னொரு வேந்தன் தோற்கடிக்க அவனைச் சிறைப் பிடித்தான். வேந்தனிடம் தோற்ற குறுநில மன்னன் அவ்வேந்தனுக்கு ஏவலன் ஆனான். வேளாண்மையையும் ஊரையும் காக்கக்; குறுநில மன்னர் தம் மகளை வேந்தர்க்கு மணமுடித்தும் கொடுத்தனர்.

காவல்மரத்தின் வீழ்ச்சி அரசனின் வீழ்ச்சி

வேந்தர் எதிரியின் காவல்மரத்தில் யானையைக் கட்டினர்.

“வினைநவில் யானை பிணிப்ப
வேர் துளங்கின நம் ஊருண் மரனே” (புறம்.347)

என்ற பாடலடிகள் வேர் வெளித்தெரிய நமது ஊரின் காவல்மரம் சாய்ந்தது எனவே; தோற்று விட்டோம் எனப் பொருள் படுகிறது.

வேந்தனிடம் சிறைப்பட்ட வேந்தன்

கிள்ளிவளவன் கருவூரை முற்றுகை இட்டுப் போர்செய்து வென்று இரும்பொறை மரபினன் ஆன சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சிறைப்பிடித்தான் (புறம்.74)

வேந்தனிடம் ஏவலர் ஆன குறுநில மன்னர்

அழிவைத் தவிர்க்க மன்னர் வேந்தர்க்கு அடிபணிந்தனர்.

"அரைசுபட அமர்உழக்கி உரைசெல முரசுவெளவி...
மன்னர் ஏவல்செய" (புறம்.26)

என்ற பாடல்பகுதி முரசை வேந்தனிடம் இழந்த மன்னர் அவ்வேந்தனுக்கு ஏவல் செய்ததைக் காட்டுகிறது.

வேந்தர்க்கு மகளை மணமுடிந்த குறுநில மன்னர்

வெளியன்வேள் மகள் நல்லினியை உதியன் சேரலாதன் மணந்தான். வேளாவிக் கோமான் பதுமனின் இரு மகள்கள் முறையே இரும்பொறை, உதியன் ஆகிய இருமரபுச் சேரரை மணந்தனர் (பதிற்.2,4,8ம் பத்துப் பதிகங்கள்). இம்மண உறவுகள் சேரவேந்தரோடு குறுநில மன்னர் இணங்கிச் சென்றதைக் காட்டுகின்றன.

வெற்றிக் கொண்டாட்டம்

வெற்றிக்கொடி ஏற்றுவது குறுநிலமன்னரின் கொண்டாட்டமாக இருந்தது. தோற்ற குறுநிலமன்னர் திறைப்பொருள் கொடுத்தபின் நண்பர் ஆயினர். வென்ற வேந்தன் தோற்றவரின் நாட்டைக் கொள்ளை அடித்தான்; அப்பொருளுடன் கோட்டைக்குத் திரும்பி; அதை இரவலர்க்கும் பார்ப்பார்க்கும் வாரி வழங்கினான்; தோற்ற குறுநிலமன்னரது நன்செய்யைத் திணைமாந்தர்க்கு அளித்தனர். தோற்ற வேந்தரின் முடிப்பொன்னால் குறுநில மன்னன் அணிகலன் செய்து மார்பில் அணிந்தான். தோற்ற குறுநில மன்னரின் முடிப்பொன்னால் ஆன அணியை வேந்தன் காலில் அணிந்து மகிழ்ந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் இழிவுபடுத்தினர்.

வெற்றிக்கொடி

வெற்றி பெற்ற குறுநில மன்னர் அதற்குரிய கொடி ஏற்றினர். மண்ணால் ஆன சுற்றுச்சுவரில் சிறப்பான நாளைக் கருதி ஏற்றிய கொடி நுடங்கும் வேளிரின் நன்செய்யை;

"அரைமண் இஞ்சி நாட்கொடி நுடங்கும்...
மென்புல வைப்பு" (புறம்.341)

எனப் பேசுகிறது பாடல்.

திறைப்பொருள்

திறை செலுத்திய குறுநில மன்னர் வேந்தர்க்கு நண்பர் ஆனமையை

"வந்து வினை முடித்தனன் வேந்தனும் பகைவரும்
தந்து திறை கொடுத்துத் தமர் ஆயினரே" (அகம்.44)

எனக் காண்கிறோம்.

கொள்ளையும் கொடையும்

"ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை ஆகலின்
நல்ல இல்ல ஆகுப" (புறம்.7)

என்ற பாடற்பகுதி கரிகாற் பெருவளத்தான் சூறையாடிய குறுநில மன்னரது நாட்டில் அழுகுரல் மட்டுமே கேட்டது என்றும்; நல்ல பொருட்கள் எதுவுமே இல்லை என்றும் அறிவுறுத்துகிறது.

தாம் அழித்த நாட்டில் கொள்ளை அடித்த பொருட்களைக் கொண்டு திணைமாந்தருள் இரவலர் ஆகிய பரிசிலர்க்கும் பார்ப்பார்க்கும் பசி ஆற்றிப் பொன்செய் புனைஇழையும் பெருங்கலமும் அளிக்கிறான் சேரன் (பதிற்.20&23). குறுநில மன்னனின் நன்செய்யைத் திணைமாந்தர்க்கு அளித்தனர் வேந்தர். அரும்பறை வினைஞர் ஆகிய அவர் கள்ளுக்குப் பண்டமாற்றாகக் கொடுக்க வன்புலத்து வரகும் கொள்ளும் விதைத்தனர். 'செந்நெல் வல்சி' எனும் நெல்லரிசி உணவை அறியாதவராக இருந்தனர். (பதிற். ப.361 பா.75 பாடபேதம்-1).

முடிப்பொன்னாலான அணிகலன்களை அணிதல்

வேந்தர் குடியைச் சேர்ந்த எழுவரை வென்று அவரது முடிப்பொன்னால் ஆரம் செய்து மார்பில் பெருமையுடன் அணிந்து மகிழ்ந்தான் நன்னன். (பதிற்.40). இது கற்பனையாகப் பாடப்பட்டது என்று ஆய்வாளர் கூறுவதை ஏற்க இயலாது (கா.அப்பாத்துரையார், தென்னாட்டுப் போர்க்களங்கள்- ப.96-112). வேந்தன் ஆகிய மோகூர்ப் பழையனை நன்னன் வீழ்த்தியதால் (அகம்.44); சினம் மிகுந்த களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்; இளஞ்சேரல் இரும்பொறை துணையுடன் அவனை அழித்தான் (பதிற்.40&88). மகனின் வெற்றி மூலமாகப் பெற்ற நன்னனின் ஆரம் தந்தை இமயவரம்பனை அலங்கரித்தது (பதிற்.14). பின்னர் அதே மோகூரை நன்னனின் வழித்தோன்றல் ஆண்டபோது; இம்யவரம்பனின் இளைய மகனாகிய கடல்பிறக்கோட்டிய குட்டுவன் அவனைத் தாக்கித்; காவல் மரம் ஆகிய வேம்பினைத் தடிந்து அழித்தான் (பதிற்.44). அதன்பின்னர் இமயவரம்பன் அணிந்த நன்னனின் ஆரம் அப்பெருவெற்றி பெற்ற குட்டுவனுக்கு உரித்தானது எனத் தெளிவான வரலாறு கிடைக்கிறது (பதிற்.45).

கிள்ளிவளவன் மன்னரை வென்று; அவரது முடிக்கு அழகுசேர்த்த பொன்னால் கழல் செய்து; அதைத் தன் காலில் அணிந்தான் (புறம்.40). எதிரிகள் தலையில் அணிந்திருந்த பொன்னால் காலணி செய்து அணிந்து; தோற்றவரை இழிவுபடுத்தினான்.

போருக்குப் பின் மகளிர் நிலை

உயிர்நீத்த குறுநிலமன்னரின் மனைவியர் தம் பாழ்பட்ட நாட்டை விட்டுப் பெயர்ந்து; உறவினரைச் சென்று சேர்ந்தனர். வேந்தர் தோற்பின் அவரது பெண்டிர் கொண்டி மகளிராகச் சிறைப்பிடிக்கப் பட்டனர். வென்ற வேந்தரும் குறுநில மன்னரும் தோற்றவரது பெண்டிர் கூந்தலைக் கயிறாக்கிக் கட்டித் தான் வீழ்த்திய காவல்மரத் தடியை இழுத்து வந்தனர்; அதைத் தடிந்து முரசு செய்தனர்.

பாண்டிய வேந்தனின் வெற்றியைப் பாடும்போது;

"அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவ
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர" (மது.166-168)

எனக் குறுநில மன்னரின் பெண்டிர் துன்பம் மேலிட அழுது; பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் தேடி; உறவினரைச் சென்று சேர்ந்ததாகப் புலவர் குறிப்பிடுகிறார்.

நன்னனின் மிதமிஞ்சிய சினம் தோற்ற வேந்தரது பெண்டிரின் கூந்தலால் தடிந்த காவல் மரத்தைக் கட்டி இழுத்து வந்ததை;

"வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியின்" (நற்.270)

என்ற பாடல் அடிகள் புலப்படுத்தும். வேதநெறியைப் பின்பற்றிய வேந்தரின் பெண்டிர் தம் கணவரை இழப்பின் கூந்தலைக் களைவது நடைமுறையில் இருந்த வழக்கம் தான் எனினும்; நன்னன் அக்கூந்தலைக் கயிறாகத் திரித்துப் பயன்கொண்டு இழிவுபடுத்தினான். கடல்பிறக்கோட்டிய குட்டுவன் நன்னனின் வழித்தோன்றல் ஆண்ட பழையனின் மோகூரைத் தான் வீழ்த்தி வெற்றி பெற்ற பின்னர் அதே போலக் கூந்தல் கயிறு திரித்து யானைகளைக் கட்டி; வஞ்சம் தீர்க்கிறான்.

"... கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழிந்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர ஒழுகை பூட்டி"ய (பதிற்.5ம் பத்துப் பதிகம்)

செயல் பழி வாங்கிய வரலாறு ஆகும்

வேந்தன் இன்னொரு வேந்தனை வெற்றி பெற்ற பின் தோற்றவனின் பெண்டிர் சிறைப் பிடிக்கப் பட்டனர். அக்கொண்டி மகளிர் வென்ற வேந்தனின் நாட்டில் வழிபாட்டுக்கு உரிய பணிகளைச் செய்தனர் (பட்டி.246). பொழுது விடியுமுன் குடிநீர்த் துறையிலேயே குளித்து வந்து தம் பணியைத் தொடங்கினர் என்பதால் அவர்கள் தம் மேன்மையைத் தக்க வைத்துக் கொண்ட சமூகநிலை தெரிகிறது. மதுரையில் கொண்டி மகளிர் வரைவின் மகளிராக வாழ்ந்தனர் எனவும் காண்கிறோம் (மது.580-589).

தொகுப்புரை

தனிச்சின்னம் எழுதிய கொடி கொண்ட வேந்தர்; அகழி அல்லது காவற்காடு அல்லது இரண்டும் சூழ்ந்த கோட்டையைக் கட்டி ஆண்டனர். நால்வகை நிலைப்படை அவரிடம் இருந்தமை எதிரிகளை வெற்றிகொள்ள ஏதுவாக இருந்தது. தம் யானைப்படை கொண்டு குறுநிலமன்னர் மாளிகையின் ஓரெயிலாகிய சுற்றுச்சுவரையும் நிலைக்கததவையும் எளிதில் இடித்துத் தள்ளி; செறுவில் யானையை நிறுத்தி வேளாண்மைக்கு இடையூறு செய்தனர். காவல்மரத்தைத் தடிந்து; நீர்நிலைகள் பாழாகும்படித் தூர்த்தனர். வயல், ஊர், குதிர் ஆகியவற்றை எரியூட்டிப் புன்செய் ஆக்கித் திணைமாந்தர்க்கு அளித்தனர். மன்னரது மகளைத் தமக்கு மணமுடித்துத் தர வற்புறுத்தினர். வென்ற வேந்தன் தோற்றவரின் நாட்டைக் கொள்ளை அடித்தான்; அப்பொருளுடன் கோட்டைக்குத் திரும்பினான்; இரவலர்க்கும் பார்ப்பார்க்கும் வாரி வழங்கினான். இரு வேந்தர்க்கு இடையிலான போரில் வென்றவன் தோற்ற வேந்தனைச் சிறைப் பிடித்தான். அவரது பெண்டிரைத் தன் ஆட்சியில் வரைவின் மகளிர் ஆக்கினான். கொண்டி மகளிர் இறைப் பணியிலும் ஈடுபட்டனர்.

குறுநிலமன்னர் நிலைப்படை, அகழி, கொத்தளம், காவற்காடு ஏதும் இன்றி, மண்ணால் ஆன மதில் மட்டுமே உடையவர். உழுவித்த அவரது பணியாட்களைப் போர்வீரராகப் பயன் கொண்டனர். எனவே வேந்தரைத் தனித்து நின்று எதிர்க்காது; பிற மன்னரோடும் நட்பினரோடும் சேர்ந்து எதிர்த்தனர். தாம் உழுவித்த வேளாண்மைக் காவலுக்கு உற்றார் துணையின் தேவையை நன்கு அறிந்தவராய் பிற மன்னர்க்கோ உறவினர்க்கோ பெண்ணைக் கொடுத்து உறவை வலுவாக்கினர். தவிர்க்க இயலாதபோது வேந்தர்க்கு மகட்கொடை நேர்ந்தனர். வெற்றிக்கொடி ஏற்றுவது மன்னரின் கொண்டாட்டமாக இருந்தது. தோற்ற மன்னர் திறைப்பொருள் கொடுத்துப் பின் நண்பர் ஆயினர். உயிர்நீத்த

மன்னரின் மனைவியர் தம் பாழ்பட்ட நாட்டை விட்டுப் பெயர்ந்து, உறவினரைச் சென்று சேர்ந்தனர்.

போரில் முரசையோ காவல்மரத்தையோ இழந்த அரசன் தோல்வியைத் தழுவியவன் ஆனான். இருதிறத்தாரும் தாம் வீழ்த்திய காவல்மரத் தடிகளை அல்லது யானைகளைத் தோற்றவரின் பெண்டிர் கூந்தலைக் கயிறாக்கிக் கட்டி இழுத்து வந்து இழிவுபடுத்தினர். வென்றவர் தோற்றவரின் காவல்மரத் தடியால் முரசு செய்து கொண்டனர்.

அரசர் ஆகிய வேந்தர், குறுநிலமன்னர் எனும் இரு திறத்தாரும் முடி அணிந்தனர். தோற்றவர் முடிப் பொன்னால் அணிகலன் செய்தனர். குறுநிலமன்னர் தம் மார்பில் அணிந்து மனம் மகிழ, வேந்தன் குறுநிலமன்னன் தலையில் அணிந்திருந்த பொன்னைக் காலில் அணிந்து இழிவுபடுத்தினான்.

முடிவுரை

வேந்தரும் குறுநிலமன்னரும் முடி தரித்தனர். முடிவேந்தர் வெற்றியால் பார்ப்பாரும் பரிசில் மாக்களாகிய திணைமாந்தரும் பயன் உற்றனர். முடிமன்னரின் வெற்றி அவரது வயல்களைக் காத்தது.

துணைநூற்பட்டியல்

- *Aingurunooru,* (2009), *kazhaka veliyeedu, chennai.*
- *Akanaanooru- kalirriyaanai nirai.* (2009). *kazhaka veliyeedu, chennai.*
- *Akanaanooru- manimidai pavalam.* (2007). *kazhaka veliyeedu, chennai.*
- *Akanaanooru niththilakkovai*, *kazhaka veliyeedu,* chennai. 2008
- *Appaaththuraiyaar,kaa.* (2014). *Thennaattup Porkkalangal.* Chennai*: poompukaar pathippakam.*
- *Kailasapathi,k.,* "*Pey Makalir*" pp.49-70, (*1999*)*, Pandaith thamizhar vaazhvum vazhipaadum, Kumaran Pathippakam*, *Chennai*.
- *Kaliththokai*, (2007). Chennai: *kazhaga veliyeedu*
- *Kanakasabai,V., Aayiraththu Ennuuru Aandukatku Murpatta Thamizhakam, Appaaththurai,Kaa.- translator, (1952)- Kazhaka veliyeedu, Chennai.*
- *Krishnasaamy Aiyangaar,S., Cheran Vanji, (1946)- Educational Publishing Company, Chennai.*
- *Kurunthokai.* (2007). *kazhaka veliyeedu, chennai.*
- *Narrinai.* (2007). *kazhaka veliyeedu*, Chennai.
- *Paripaadal*, *Po.ve.Somasuntharanar,* (commentator), Chennai: *kazhaka veliyeedu*, (2007).
- *Pasuvalingam,Ma., Changakaala Vanji, (1984) Sekar patippakam, Chennai.*
- *Paththuppaattu*- part ii. (2008). *kazhaka veliyeedu, chennai.*
- *pathirruppaththu.* (2007). *kazhaka veliyeedu, chennai.*
- *Puranaanooru, u.ve.saaminaathaiyar* (editor), 3rd edition, 1935, La journal press, Chennai.
- *Puranaanooru* part I&II, *Auvai Chu.Duraisamippillai*- commentator, (2007). *kazhaka veliyeedu*, *Chennai.*
- *Aravindan Neelakandan* "Dr. R. *Krishnamurthy* (1933-2021): A Life In Quest Of Ancient Scripts And Coins" SWARAAJYA- March 5th 2021- [Dr. R. Krishnamurthy (1933-2021): A Life In Quest Of Ancient Scripts And Coins]().
- *Pattanam* and the Excavations- Muziris heritage- Spice route- [Rediscover the Spice Route- a Kerala Tourism and UNESCO Project in Muziris]()

இனம் INAM
Since 2015 முதல்
பல்துறைப் பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
Multi Diciplinary International E- Journal of Tamil Studies
பிப்புருவரி, மே, ஆகட்டு, நவம்பர் மாதங்களில் வெளிவரும் । Published in February, May, August and November
மலர்: 10, இதழ்: 40, நவம்பர், 2024 । Vol.: 10, Issue: 40, November, 2024
ISSN: 2455 - 0531, UAN: TN0300061112
inameditor@gmail.com, www.inamtamil.com, +91 9677821364, +91 9600370671.